# தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும்

## தொகுதி - 1


பதிப்பாசிரியர்

முனைவர் கோ.விசயராகவன்

முனைவர் மூ.கவிதா

முனைவர்.நா.சுலோசனா



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113

# நூல் விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | **தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும் (தொகுதி - 1)** |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் கோ.விசயராகவன்<br>இயக்குநர் (மு.கூ.பொ)<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>சென்னை - 600 113.<br><br>முனைவர் மூ.கவிதா<br>உதவிப் பேராசிரியர்<br>தமிழ்த்துறை, ஸ்ரீ இராமசாமி நாயுடு<br>ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்.<br><br>முனைவர் நா.சுலோசனா<br>உதவிப் பேராசிரியர்<br>தமிழமொழி (ம) மொழியியல் புலம்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>தரமணி, சென்னை - 113. |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>இரண்டாம் முதன்மைச் சாலை,<br>தரமணி, சென்னை-600 113.<br>தொலைபேசி எண்: 044-22542992 |
| வெளியீட்டு எண் | : | |
| ISBN | : | 978-93-85165-37-5 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2018 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6கி.பி. டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டம்மி |
| எழுத்தின் அளவு | : | 11 புள்ளிகள் |
| பக்க எண்ணிக்கை | : | xiv+364 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | ரூ. 470/- (ரூபாய் நாநூற்றி எழுபது மட்டும்) |
| அச்சகம் | : | நவநீதம் அச்சகம், சென்னை |
| பாடம் | : | ஆய்வுக் கட்டுரைகள் |

# தமிழர்களின் வாழ்வியலில் பனை - இலக்கியங்கள் ஊடான பார்வை


பேராசிரியர் க.அருந்தவராஜா
இணைப்பேராசிரியர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
E.mail; arunn.msu@Gmail.com

சி.மங்களரூபி
விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
mangalaruby1989@gmail.com


## அறிமுகம்

"திணைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்" - திருக்குறள்

இவ்வாறு நன்றியினது பயனோடு பனையினது பயனையும் ஒப்பிட்டு வள்ளுவர் கூறியதிலிருந்து பனை மரத்தினது முக்கியத்துவமானது தெளிவாகின்றது. பனையுடன் தமிழ் மக்களுக்குமிக நீண்டகாலமாகவே உறவு இருந்து வருகின்றது. இத்தகைய உறவினது தன்மைகளை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து தற்காலம் வரை கிடைத்து வருகின்ற ஆதாரங்கள் எமக்கு தெளிவாகப் புலப்படுத்துகின்றன. இதனது பாகங்கள் அனைத்தும் மனிதனுக்குப் பிரயோசனமானவை. அதாவது 1980களில் இத்தகைய பனையினது பயன்பாடானது ஏறத்தாழ 800ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பனை மரமானது எப்போது, எப்பகுதிகளில் முதலில் தோற்றம் பெற்றதென்பது பற்றி அறிஞர்களிடையிலே கருத்து முரண்பாடுகள் காணப்பட்டிருந்தாலும்கூட இவற்றினது செல்வாக்கானது தென்னாசிய நாடுகளான இந்தியா, இலங்கைபோன்ற நாடுகளில் அதிகமென்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் பனையானது தமிழ் மக்களது வாழ்வியலுடன் பண்டுதொட்டுக் கொண்டிருக்கின்ற நெருக்கமான உறவினைப் பெருமளவிற்கு இலக்கியங்களை அடிப்படையாக வைத்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## இயல்புகள்

தமிழ் மக்களுக்கு கிடைத்த இயற்கைச் செல்வங்களுள் பனைச் செல்வமானது சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளதென்பதனை எவரும் மறுப்பதற்கில்லை. அராபிய நாட்டவர்களுக்கு எப்படி பேரிச்சம்பழம் பிரயோசனமாக இருக்கின்றதோ அவ்வாறே தமிழ் மக்களுக்குப் பனையும் அதனோடு தொடர்புபட்ட பொருட்களும் அமைகின்றன. இது வறட்சி மற்றும்நோய்கள் போன்றவற்றினைத் தாங்கக் கூடியதும் தரிசு நிலங்களில் எளிதில் வளரக்கூடிய இயல்பினையும் கொண்டுள்ளது.பெண்ணை,தாலம், தாளி, தாளிப்புல், கற்பகதரு, ஏடகம்,துருமேகம்,நீலம், பாரிபத்திரம், காமபுரம், தரும விசாரன், கரும்புறம்,போந்து, புல்லூதிபம், போந்தை, புற்பதி, தாலம் போன்ற பல்வேறு பெயர்களினால் அழைக்கப்படுகின்ற பனையினைச் சிலர் வற்றாத புதையல் என்றே கூறுவர். (குலரத்தினம்,கா.சி., 1977,ப.07)பனையானது மரம் போன்றதொரு அமைப்பிலே தெரிந்தாலும்கூட அது உண்மையில் ஒரு புல்லினத்தினைச் சார்ந்த தாவர இனமாகவே கருதப்படுகின்றது. பொதுவாக இது பயிரிடப்படுவதில்லை. தானாகவே வளருகின்ற இயல்பினை உடையது. இதனது சிறிய தோற்றமானது வடலி என்ற பெயரினால் அழைக்கப்படுகின்றது. ஒரு பனையானது முதிர்ச்சியடைய ஏறத்தாழ இருபது வருடங்களாவது செல்லும். மேலும் இதனது வயதானது மனிதர்களுடைய சராசரி வயதிலும் பார்க்க அதிகமானதென்பது குறிப்பிடத்தக்கது. இவை குறிப்பிடத்தக்க வளைவுகள் எவையுமின்றி சுமார் 30 மீட்டர்கள் வரை வளருகின்ற இயல்பினை உடையதாகும். கிளைகள் இவற்றுக்கு கிடையாது. உச்சிப் பகுதியில் ஏறத்தாள 30-40 மீட்டர்கள் வரை விசிறி வடிவமான ஓலைகள் வட்ட வடிவத்தில் காணப்படும்.

## தோற்ற காலம் பற்றிய கருத்துக்கள்

இதனது தோற்ற காலந் தொடர்பாக அறிஞர்களிடையிலே முரண்பட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. இத்தகைய கருத்துக்கள் எவையும் அதனது தோற்ற காலத்தினையோ அல்லது அவை எங்கு முதலில் தோன்றியது என்பது பற்றியோ சரியான தகவல்களை வழங்குவதாக அமையவில்லை.பனையினது வரலாற்றினை ஆராய்ந்த தாவரவியலாளர்களும் வரலாற்றாசிரியர்களும்

இதனது தோற்ற காலத்தினைக் கணிப்பிட்டுக் கூறமுடியாத அளவிற்கு இம்மரத்தினை மிகவும் தொன்மையானதாகக் கருதுகின்றனர். அவர்களில் சிலர் இம்மரமானது முதலில் ஆபிரிக்காவிலேதான் தோன்றியதாகவும் பின்னர்தான் ஆசிய நாடுகளுக்கும் பரவியதாகக் கூறுவர். (பாக்கியநாதன்,மு.,2003, ப.17) ஆபிரிக்காவிலிருந்து இம்மரமானது இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தாலும் பின்னர் அங்கிருந்துதான் இலங்கை உட்பட பிற ஆசிய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம்.

**இலக்கியங்களில் பனை**

சங்ககாலத்தேய இலக்கியங்கள் பலவற்றில் பனை தொடர்பான குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவைதான் காலத்தால் முற்பட்ட பனை பற்றிய தகவல்களைக் கூறுகின்ற இலக்கியங்களாகக் காணப்படுகின்றன. அவற்றில் புறநானூறு, பெரும்பாணாற்றுப்படை என்பன குறிப்பிடத்தக்கன. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நுல்கள், தேவாரங்கள், காவியங்கள் சிற்றிலக்கியங்கள் நவீன இலக்கியங்கள், நாட்டார் பாடல்கள் போன்றவற்றில் பனை பற்றிய செய்திகள் உள்ளன. பனையும் அதுசார்ந்த பொருட்களும் தமிழ் இலக்கியங்களில் நேரடியாகவும் உவமையாகவே காட்டப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.(சிவலிங்கராஜா,எஸ்.,2014,ப.49)

பனையினது பயன்பாடு பற்றிய புறநானூற்றில் வருகின்ற பாடலை இவற்றுக்கு எடுத்துக்காட்டாகப் பின்வருமாறு குறிப்பிடலாம்,

“தலையோர் நுங்கின் றீஞ்சேறு மிசைய
இடையோர் பழத்தின் பையங்கனி மாந்தக்
கடையோர் விடுவாய்ப்பிசிரொடு சுடுகிழங்கு நுகர!“ (புறம் 225)

இப்பாடலில் வருகின்ற “பைங்கனிமாந்த“ என்ற தொடரினைப் “பைங்கிளி“, மாந்த என இருவகைப்படுத்தலாம். பனம்பழத்தினது சாற்றினைப் “பனங்களி“ என அழைப்பதே வழக்கமாகும்.(சிவலிங்கராஜா,எஸ்.,2014,ப.49) மேலும் சங்கஇலக்கியங்களில் அக்காலத்தில் சொல்லப்பட்ட சில சொற்கள் தற்போது மருவிவருகின்றமையும் அவதானிக்கத்தக்கது,

“மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை
இரும்பனம் பசுங்குடைப்பலவுடன் பொதிந்து“ (குறுந் 168)“

குறுந்தொகையில் உள்ள “பசுங்குடை“ என்ற சொல்லானது உணவுப்பொருட்களை மூடிவைக்கின்ற பொருள் என உரையாசிரியர்கள் கூறுவர். ஓலையில் உணவுப் பொருட்களைக் கொண்டு செல்வது தற்போது “குடலையிற் கொண்டு செல்லுதல்“ என்ற வழக்காறு இன்றும் உள்ளது. புறநானூறு 177ஆவது செய்யுளில் “பனங்குடை“ என்ற சொல்லானது உண்கலம் என்ற கருத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

திருக்குறளில் பனை பற்றிய செய்திகள் பல உள்ளன. திருவள்ளுவரினால் அருளிச் செய்யப்பட்ட திருக்குறளில் முப்பாலிலும் 3 குறள்களினால் இதனது சிறப்பு காட்டப்படுகின்றது. (குலரத்தினம்,கா.சி.,1977,பக்08-09) அதில் வள்ளுவர் பெரியதற்குப் பனையினையும் சிறியதற்கு தினையினையும் உவமையாகக் கூறுகின்றார். அறத்துப்பாலில் “செய்நன்றியறிதல்“ எனும் அத்தியாயத்தில் பயன் தெரிந்தவர்களுக்குத் தினையளவு நன்றி செய்தால் போதும் அவர்கள் அதனைப் பனையளவாகப் போற்றுவர் என்ற கருத்தில் அதனைப் பின்வருமாறு விளக்குகின்றார்,

“தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாகக்
கொள்வர் பயன்தெரி வார்“ .(குறள் 104)

அவ்வாறே பொருட்பாலில் “குற்றங்கடிதல்“ எனும் பகுதியில் பழிக்கு நாணுவோர் தாம் செய்கின்ற சிறிய குற்றமானது தினையளவாக இருப்பினும் அதனைப் பனையினது அளவாகக் கருதிப் பச்சாத்தாபப்படுவர் என்பதனைப் பின்வருமாறு திருவள்ளவர் கூறுகின்றார்,

“தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்“ (குறள் 433)

காமத்துப்பாலில் "புணர்ச்சி விதும்பல்" என்ற அதிகாரத்தில் தலைவியானவள் காமம் மிகுந்தவளாய் இருப்பின் அவள் தினையளவுதானும் ஊடல் செய்யலாகாது என்பர். இதனைப் பின்வருமாறு வள்ளுவர் கூறுகின்றார்,

"தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்" (குறள் 1283)

நற்பண்பு உடையனிடம் செல்வம் சேர்ந்தால் அது ஊரின் நடுவே உள்ள பயன் மிக்க மரம் பழங்கள் பழுத்திருப்பதனைப் போன்றதாகும். ஒருவன் தினையளவாகிய உதவியினைச் செய்தபோதும் அதனது பயனை ஆராய்கின்றவர் அதனையே பனையளவாகக்கொண்டு போற்றுவர். இதனைப் பின்வரும் குறள் அடிகள் கூறுகின்றன.

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்" (குறள் . 216)

மூவேந்தருள் சேர மன்னரும், வீரர்களில் பலராமரும், ஞானியருள் பீஸ்மரும் பனையினை மதித்து அவற்றினை மாலையாகவும் கொடியாகவும் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (கணபதிப்பிள்ளை,க.,1962,ப.126) மேலும் மன்னர்களது தசாங்களில்கூட பனையானது சிறப்புடன் விளங்கியிருந்தமையினைக் காணலாம். பல்லவர் காலத்திலிருந்து (கி.பி.6) பனையானது தமிழக மக்களது பண்பாட்டுக் கூறுகளிலொன்றாக இருந்துவந்துள்ளது.நீதி நூலான நாலடியார் பாடல்களிலும் பனை பற்றிய செய்திகள் உள்ளன.

திருஞானசம்பந்தருடைய தேவாரப் பாடல்களிலும், அற்புதங்களிலும் பனை தொடர்பான விடயங்கள் உள்ளன. இவருடைய காலத்தில் பனந்தோப்புக்கள் தனித்தோட்டங்களாகக் காணப்பட்டன. சம்பந்தருடைய அற்புதங்களிலொன்று ஆண் பனையினைப் பெண் பனையாக மாற்றியதும் பெண் பனையினை ஆண் பனையாக மாற்றியதென்பதும் குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் வாழ்ந்த சிவனடியார்கள பலரும் பனை வளத்தினைப் பெருக்குவதில் அக்கறை கொண்டவர்களாக விளங்கினர். திருப்பனந்தாள் அருணசடேசுவரர் ஆலயத்தினது பனை வளமானது சிறப்புற்றிருந்தது. (குலரத்தினம்,கா.சி.,1977,ப.08) மாணிக்கவாசர் தனது "திருக்கோவையாரில்" அழகாக "கண்ணார்ந்த பெண்ணை" என பனை மரத்தினைக் கண்ணுக்குப் பொருத்தமன பனை என விளக்கம் கூறுவர். திருமூலர் தன்னுடைய திருமந்திரத்தில் பனை பற்றிய சில தகவல்களை வழங்கியுள்ளார். எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றினைக் கூறலாம்,

"ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியிற்
சாறு படுவன நான்கு பனையுள
ஏறற் கரியதோர் ஏணியிட் டப்பனை
ஏறலுற் றேன்கடல் ஏழுங்கண் டேனே"

ஏறத்தாழ இதேகாலத்தினைச் சேர்ந்த இலங்கை வரலாற்றினைக் கூறுகின்ற இலக்கியமான "மகாவம்சத்தில்" பனை பற்றிய குறிப்புக்கள் சிலஇடங்களில் காணப்படுகின்றன. உதாரணமாகப் பின்வரும் விபரத்தினைக் குறிப்பிடலாம்.

"எட்டுப் பனை உயரத்தில் நின்ற அதைப் பார்த்த (அஸ்தி) மக்கள் வியப்பினில் திகைத்தனர்"(மகாவம்சம்,அத்.17,செய்.44) சோழர் காலத்தில் தோன்றிய கலிங்கத்துப் பரணியிலும் பனை பற்றிய குறிப்புக்கள் உள்ளன. ஔவையாரும் அவர் போன்ற புலவர்களாலும் போற்றப்பட்ட இப்பனையானது ஒரு மருந்தாகவும் பயன்படுகின்றது. யானையினது தும்பிக்கைக்கு உவமையினைக் கூறியோர் உடனடியாகப் பனையினையும் கருத்தில் கொண்டனர். பனைக்கை "மும்மதவேழம்" எனவும் "பனை புரைகைம்" "மதயானை" எனவும் "இரும்பனையன்ன பெருங்கை யானை" எனவும் பெரியவர்கள் பலரும் பனையினைப் பற்றிப் புகழ்ந்துள்ளனர்.(பாக்கியநாதன்,மு.,2003,ப.12)

மேலும் பனையுள்ள நாட்டில் பஞ்சம் இல்லையெனவும் பனையின்றி வாழ்வில்லை எனவும் வடலி ஆயிரம் வளர் எனவும், பனை மரத்தில் படவாள் பார்த்தல் எனவும், பனை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன் எனவும் வடலி வளர்த்துக் கள்ளுக் குடித்தல், காகம் இருக்கப் பனம் பழம் விழுதல் போல" எனப் பல பனை பற்றிய பழமொழிகள் தமிழகத்திலும் யாழ்ப்பாணத்திலும் பயன்பாட்டிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.பனையினைப் பற்றிய விடுகதைகள்

சிலவும் பனையுடன் தொடர்புபட்ட வகையில் உள்ளன. எடுத்துக்காட்டாகத் "தொப் என்று விழுந்தான் தொப்பி கழண்டான்" என்ற விடுகதையானது பனம் பழத்துடன் தொடர்புபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பனையும் தொடர்பான ஊர்ப்பெயர்களும்கூட தமிழகத்திலும் யாழ்ப்பாணத்திலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. கருகம்பனை,பன்னாகம்,பனங்காமம், வடலியடைப்பு, வடலியடி போன்ற இடப்பெயர்கள் சில இதற்கு உதாரணங்களாகும். பொதுவாகத் தரும சிந்தனைகளைக் கொண்டிருப்பவர்களை உள்ளூரில் உள்ள பயன்தருகின்ற மரத்திற்கு ஒப்பிடுவர். படுபனையன்னர் பலர் நச்ச வாழ்வர் என்பது அறிஞர்களது வாக்காகும். பனையினைத் தாலப்புல்லொன தொல்காப்பியர் கூறியது போன்றே இளங்கோ அடிகளும் பனையோலைப் பாயினை "தாலைப் புல்லிற்றந்திடு தவிசு"எனக் கூறுகின்றார். பிறரது உதவியின்றித் தனது முயற்சியினால் வாழ்வதுடன் பிறருக்கும் உதவி செய்பவனை பனைக்கு நிகரானவன் என அக்காலங்களில் கருதுவர். (சம்பந்தம்,கே.,1966,ப.04) பெண்கள் காதில் அணிகின்ற "தோட்டினை காதோலை" என அழைக்கின்ற வழக்கமானது தமிழர் சமுதாயத்தில் நீண்டகாலமாக இருந்து வந்திருக்கின்றது. மடலேறுதல் என்பது பனை ஓலையினது மடலையுடன் தொடர்புபட்ட வகையில் உள்ளது. அகத்திணை மரபிலே பனை மட்டையில் குதிரை போன்று செய்து காதலன் அதில் உலாவருவதன் மூலமாகத் தனது காதலை வெளிப்படுத்தவது "தலைமடலேறுதல் என அழைக்கப்படுகின்றது. (சிவலிங்கராஜா,எஸ்.,2014,பக். 49-50) எழுதுவதற்கு கடதாசி பயன்படுவதற்கு முன்னதாகவே பனையின் ஓலையிலேதான் எழுதுவது வழமையாக இருந்தது. அவ்வகையில் எமது கல்விப் பாரம்பரியத்திலும் பனைக்குச் .சிறப்பானதொரு இடமுண்டு. நீண்டகாலமாகப் பதநீரானது தமிழர்களின் வருவாய் மூலங்களிலொன்றாக இருந்து வருகின்றது. இதனைச் சான்றோர்கும்மி"என்ற நூலினது 124ஆவது செய்யுள் பின்வருமாறு கூறுகின்றது.,

" நற்காந்த வீரிய நாடன் சினம்பல
நாடானைப் பார்த்து நமது குல
விற்பத்தியம் பனை யீந்து தென் மூன்று
விருட்சத் தெருந் தெளிர் மின்னரசே"

பனை மரத்தினைக் கற்பகதரு என அழைப்பர். நீண்ட வாழ்நாளினைக்கொண்ட இதனை நிகண்டு நூல் பிரமனது வாழ்நாளைப் போன்றதெனப் பின்வருமாறு வர்ணிக்கின்றது,

"கற்பகமே பிரமன் வாழ்நாள்
கற்பகதரு சுவர்க்கம்"

இவ்வாறு சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலமென ஆரம்பித்துத் தற்காலம்வரை தமிழ் மக்களது வாழ்வியலுடன் இணைந்த வகையில் பனையும் அது சார்ந்த பொருட்களும் உள்ளன. "கற்பகதருவைச்சார்ந்த காகமுமமிர்த முண்ணும்" என அறிஞர்கள் கூறுவர். கற்பகதரு எனப்படுவது பனை மட்டுமே. ஆகாயம் வரை வளர்ந்து மட்டைகளுடன் திகழ்வதால் ஆகாய கங்கை எனவும் காமமூட்டும் தேனைச் சுரப்பதனால் காமதேனு எனவும் சரதரு எனவும் போற்றப்படுகின்றது. கிறிஸ்தவ பைபிளில் நேர்மையானவனுக்கு உவமையினைக் கூறுகின்றபோது "நீதிமான் பனையினைப் போன்ற செழித்து லெபனானில் உள்ள கேதுருவைப் போல் வளர்வான்" என்கின்றது. ஈழகேசரிப் பத்திரிகையில் யாழ்ப்பாணத்துப் புலவரான சோமசுந்தரப்புலவர் பனையினது அவசியத்தினை உணர்த்தி இயற்றிய பாடல்கள் தொடர்ந்து வெளிவந்த வண்ணமிருந்தன. அவற்றில் சில வரிகள் வருமாறு,

" இல்வாழ்வுக் காகிய எல்லாப் பொருளையும்
எங்களுக்(கு) எப்பொழு துங்கொடுக்க
வல்லபனை எங்கள் செந்தமிழ் நாட்டிலே
வாழிய வாழிய........(ஈழகேசரி,1935.10.24,ப04)

கம்பராமாயணத்தில் பாலகாண்டத்தில் கம்பர் பின்வருமாறு பனை மரத்தினது இயல்பினைக் கூறுகின்றார்,

"பூக்கம ழோதியர் போது போக்கிய
சேக்கையின் பச்செருக்குஞ் சிந்தையர்
ஆக்கிய வமிர்தென வம்பொன் வள்ளத்து
வாக்கிய பசு நறா மாந்தன் மேயினர்"

இதில் "பசுநறா" என்பது பதநீருக்குரிய பெயர்களிலொன்றாகக் காணப்படுகின்றது. இராமருடைய திருமணத்தினைக் காணுவதற்குச் சென்ற ஆண்களும் பெண்களும் பனந்தோப்பினைத் தாண்டிச் செல்கின்றபோது பதநீரினை வாங்கி பாத்திரங்களில் உண்டதாகக் கூறுகின்றார். (சம்பந்தம்,கே.,1966,ப.04)

**பனம் பொருள் உற்பத்திகள்**

பனையானது வேரிலிருந்து அதனது உச்சி வரை மனிதனுக்குப் பயன்படுகின்ற வகை சார்ந்ததாகும்.(இலங்கை பனை அபிவிருத்தி சபையினது அறிக்கை, 2008,ப.03) அவ்வகையில் பனை மரத்தினை அழிக்கமால் பயன் பெறுவதே எமது சமுதாயத்திற்குப் பயனுள்ளதாகும். கிழங்கு, ஒடியல், பனம்களி, பணியாரம், பானம், ஒடியல்,ஊமல், கட்டடப் பொருட்கள், ஓலை, பதநீர், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, விலங்குத்தீவனம், வினாகிரி, பனாட்டு, வெல்லம், ஐஸ்கிரீம், யோக்கட்,கேக், இனிப்பு வகை, புழுக்கொடியல், புழுக்கொடியல் மா, கள்ளு, சாராயம்,ஈர்க்கு, தும்பு, நார் முடிகள், கலைப் பொருட்களின் உற்பத்தி, வெல்லம், தூரிகை, கூடைகள், மெத்தை, கயிறு, கால் துடைப்பம், எரிபொருட்கள், பொதி செய்யும் பெட்டிகள், பாய்கள், கடகம், பட்டை, தளர்நார், கூடைகள், இடியப்பத்தட்டு, நீத்துப்பெட்டி, விசிறிகள், பொம்மைகள், அமைப்பிதழ்கள், தொப்பி, விறகு அடுக்களைப் பொருட்கள், நொங்கு, கூழ், வேலி அடைத்தல், பறவைக் கூடுகள், வேலை வாய்ப்புக்கள் இப்படி இன்னோரன்ன பல வழிகளில் மக்களுக்கு வருவாயினைப் பெற்றத் தருகின்ற இனமாக உள்ளது. நமது நாட்டு மக்கள் இதனது முக்கியத்துவத்தினை உணர்ந்துள்ளனரோ இல்லையோ அமெரிக்கா,இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, டென்மார்க், பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகள் பலவும் அவுஸ்ரேலியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளும் இதனது முக்கியத்துவத்தினை உணர்ந்து தற்போது இவற்றினைக் கொள்வனவு செய்து பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பனையினது பாகங்கள் மருத்துவ குணங்கள் நிறைந்ததாகக் காணப்படுகின்றன. யானைத் தந்தம், பனம் பழம், பனம் விதை என்பன இவற்றில் குறிப்பிடத்தக்கன. இயற்கை மருத்தவத்தில் வழங்கப்படுகின்ற மருந்து வகைகளை குறிப்பாக உள்ளெடுக்கின்ற மருந்துகளைப் பால்,தேன், நீர், முலைப்பால், வெற்றிலைச்சாறு, பனையினது வெல்லம் போன்ற அனுபானப் பொருட்களுடன் சேர்த்து உள்ளெடுப்பது தற்காலம் வரை யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் இருந்து வருகின்றது. (விசாகரூபன்,கி., 2004, ப.106) புற்றுநோய்க்கான மருந்துகளிலொன்றாக பனற்கற்கண்டு ஏலக்காய், கரட் சாற்றடன் சேர்த்துப் பயன்படுத்தப்படுகின்றது. இவற்றினைவிட சக்கரை வியாதி, உயர் குருதி அமுக்கம், உடற் சூட்டினைத் தணித்தல், மலச்சிக்கலைத் தவிர்த்தல் போன்ற பல மருத்துவ குணங்களை இவை கொண்டவை.

**நிறைவுரை**

நாடுகள் ஒவ்வொன்றிலும் ஆண்டவனது கருணையின் நிமித்தமாக விருட்சங்கள் பல தோன்றியுள்ளன. இத்தகைய விருட்சங்களில் பனையானது தனது முழுமையினையும் மனிதன் மற்றும் உயிரினங்களின் வாழ்விற்கு அர்ப்பணிக்கின்ற வகையில் படைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பனையும் அதுசார்ந்த பொருட்களும் வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொடக்கம் மனிதனது வாழ்வியலின் சகல நடவடிக்கைகளிலும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. தற்காலத்தில் இயற்கை வளமான இவற்றினைக் கைவிட்டதன் விளைவுகளிலொன்றே தனது வாழ்நாளினது அளவினை மனிதன் குறைக்க வேண்டியேற்றப்பட்டதெனலாம்.

**குறிப்புக்கள்**


1.கணபதிப்பிள்ளை, க.,(1962),ஈழத்து வாழ்வும் வளமும், பாரதி புத்தக வெளியீடு, யாழ்ப்பாணம்.

2.குலரத்தினம், கா.சி.,(1977), பனைவளம், மில்க்வைற், யாழ்ப்பாணம்.

3. சங்கரன்.,(1986), மகாவம்சம்(தமிழ் மொழி பெயர்ப்பு),கொழும்பு.

4. சம்பந்தம்,கே.,(1966), இனிக்கும் பதநீர், சென்னை மாநிலப் பனைவெல்லச் சமேளனம், சென்னை.

5. சிவலிங்கராஜா,எஸ்.,(2014ஒக்ரோபர்), "தமிழ் மக்களது வாழ்வியலிற் பனை". கலைக்கேசரி, வீரகேசரி எக்ஸ்பிரஸ் வெளியீடு, கொழும்பு.

6. பாக்கியநாதன்,மு.,(2003), பனையியல், பதிப்பு.உரிமை தவமலர், யாழ்ப்பாணம்.

7. விசாகரூபன்,கி.,(2004), நாட்டார் வழக்காற்றியல், மலர் பதிப்பகம், யாழ்ப்பாணம்.